11.04.2022
அசல் வழக்கு எண்: 239/2017

வா.சா.1 சாட்சி ஒச்சம்மாள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

18.4.1985ம் தேதி எனக்கு P.பாலசுப்பிரமணியன் மனைவி ரத்தினம் எழுதி கொடுத்த கெட்டி கட்டிட ஓட்டடுக்கு மனை வீடு வகையறா பதிவு கிரைய பத்திரத்தின் பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும். 06.05.1991ம் வருடம் எனக்கு பாண்டிலெட்சுமியம்மாள் தனக்ககாகவும், தன் மைனரின் கார்டியன் ஸ்தானத்திலும் எழுதிகொடுத்த ஓட்டடுக்கு மனை வீடு வகையறா பதிவு கிரைய பத்திரத்தின் பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும். என் பெயருக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கிய மின் கட்டண ரசீதுகள்(எண்ணம் 4) வா.சா.ஆ.3 ஆகும்.
(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).